[2012 மே 9

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிற்கே ஒரு முன்னோடி மாநிலமாகத் தமிழகம் திகழ்வதற்காகத்தான் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வட்டங்களைப் பிரித்து வழங்கினார்கள். அதன்படி மானாமதுரையைப் பிரித்து, திருப்புவனம் வட்டம் வழங்கப்பட்டிருக்கின்றது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்றபோது, அந்தப் பேரூராட்சிப் பகுதியில் மக்கள் நீண்ட நெடுங்காலமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள், அவர்களுக்குப் பட்டா வழங்க முடியுமா என்ற ஒரு கோரிக்கை இங்கே வைத்திருக்கிறார். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் ஓராண்டிற்கு ஒரு இலட்சம் பட்டாக்கள் வழங்கப்படும் என்ற இலக்கை நிர்ணயித்தார்கள். மனித நேயம் மிக்க தலைவியாக இருக்கின்ற புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாட்சியில் 1,21,682 பேர்களுக்குப் பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆண்டும் அதைப்போல பட்டாக்கள் வழங்குவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.*

திரு. க. பாலகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சிகளில் வகை மாற்றம் செய்து பட்டா வழங்குவதற்கான அரசாணை காலாவதியாகிவிட்டது. அந்த அரசாணையைப் பட்டா வழங்குகின்ற வகையிலே கால நீட்டிப்பு செய்வதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப் பற்றி அரசு பரிசீலிக்கும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 234, மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

2012 மே 9]

235—

கடலுக்குள் காற்றாலை

***1375—திரு. நா. இராமகிருஷ்ணன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலுக்குள் காற்றாலை அமைத்து மின் உற்பத்தி செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கடலுக்குள் காற்றாலை அமைத்து மின்சாரம் உற்பத்தி செய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன், இருக்கையில் இல்லை.*

வினா வரிசை எண் 235, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

235—

கழிவுநீர்

***3142—திரு. வி.சி. சந்திரகுமார்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு காளிங்கராயன் வாய்க்கால், காவிரி ஆறு ஆகியவற்றில் கழிவுநீர் கலப்பதைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TRUTH ALONE TRIUMPHS